NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 21 February 2017

# ஊழியர்கள் வெளிநாடுகளிலும் திறன்களை வலுப்படுத்த உதவி

சிங்கப்பூரர்கள் தங்களது திறன்களை நாட்டுக்கு வெளியிலும் பயன்படுத்த உதவும் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

உதாரணமாக, சிங்கப்பூர் பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டில் தொழில்தொடங்குவதற்கான வேலை அனுபவம் பெற இத்திட்டம் உதவும்.

இங்குள்ள தொழில்முனைவர்களையும் வர்த்தக முதலாளிகளையும் வெளிநாடுகளில் உள்ள தொழில் வழிகாட்டிகள் மற்றும் முதலீட்டாளர்களுடன் ஒன்றிணைக்கும் வளர்ச்சித்தளங்களை சிங்கப்பூருக்கு வெளியே அமைக்க உதவுவது அதன் நோக்கம்.

அத்துடன், இந்த வட்டாரத்தில் விரிவுபடுத்த முன்வரும் உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இடையிலான பங்காளித்துவத்தை ஏற்படுத்தவும் இத்திட்டம் உதவும்.

உலகப் புத்தாக்கக் கூட்டணி என்னும் அந்தப் புதிய திட்டத்தை நிதி அமைச்சர் ஹெங் சுவீ கியட் நேற்று தமது வரவு செலவுத் திட்ட வாசிப்பில் அறிவித்தார்.

> “சிங்கப்பூரர்கள் தங்களது திறன்களுக்காகவும் நிலைமைக்கேற்ப ஒத்துப்போகக்கூடிய தன்மைக்காகவும் மதிக்கப்படுகிறார்கள். அவர்களின் ஆற்றலை வளர்க்க வேண்டியுள்ளது. மாற்றம் விரைவாக நிகழ்ந்துவரும் நிலையில் சிங்கப்பூரர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான அதிகமான உதவிகளை அரசாங்கம் வழங்கும்.
>
> **நிதி அமைச்சர் ஹெங் சுவீ கியட்**

மாறிவரும் பொருளியல் நிலவரத்துக்கு ஏற்ப சிங்கப்பூர் ஊழியர்களைத் தயார்படுத்துவதற்கான திருப்புமுனை நடவடிக்கைகளின் ஒரு பகுதி இத்திட்டம்.

சிங்கப்பூரர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முயலுவதாக திரு ஹெங் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

“நமது மக்கள் தங்களது திறன்களுக்காகவும் நிலைமைக்கேற்ப ஒத்துப்போகக்கூடிய தன்மைக்காகவும் மதிக்கப்படுகிறார்கள். அதிக வேலை விகிதங்களையும் உயரும் ஊதியங்களையும் அனுபவித்து வருபவர்கள் அவர்கள்.

“இந்த ஆற்றல் திறன்களை நாம் வளர்க்க வேண்டும். மாற்றம் விரைவாக நிகழ்ந்து வரும் நிலையில் சிங்கப்பூரர்கள் முன்னோக்கிச் செல்ல உதவும் அதிக செயல்களை நாம் கொண்டு வருவோம்,” என்றார் அமைச்சர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.